# பின்னுரை

# எல்லா விஷயங்களின் தொகுப்புரை

*''காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்" (எபே. 1:9, 10).*

*''ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத் தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோ. 2:9, 10).*

ஒவ்வொரு பிரசங்கியாரும் அல்லது கூட்டத்தின் பேச்சாளரும், சில வேளைகளில் "மேடைப் பயம்" என்று பொதுவாக அழைக்கப்படுவதை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவருடைய கைகள் குளிர்ந்து, ஈரமாகி விடுகின்றன, அவருடைய வாய் உலர்ந்து பஞ்சு போலாகி விடுகின்றது, அவருடைய கால்கள் தடுமாறி நடுங்குகின்றன, மற்றும் அவர் தனது வயிற்றுக்குள் பட்டாம்பூச்சிகள் சுற்றித் திரிவது போல உணருகின்றார்.

நான் பிரசங்கித்த இடம் ஒன்றில், பிரசங்க மேடைக்கு இரு புறத்திலும் கைப்பிடிகள் வைக்கப்பட்டிருந்ததை நான் கவனித்தேன். இந்தக் கைப்பிடிகளைப் பிரசங்கிப்பவர் சுலபமாகப் பற்றுமளவுக்குச் சரியான இடத்தில் அவைகள் பொருத்தப்பட்டிருந்தன. அந்தக் கைப்பிடிகள் வைக்கப்படுவதற்கான விருப்பார்ந்த நோக்கத்தைப் பற்றி நான் ஒரு பொழுதும் கேள்விப்பட்டதில்லை, ஆனால் பயப்படும் பிரசங்கியார் அவற்றைப் பற்றிக் கொண்டு தம்மைத்தாமே நிதானப்படுத்திக் கொள்ள அவை மிகச் சிறந்தவைகளாய் உள்ளன.

ஒரு பிரசங்கியார், தாம் பிரசங்கிக்கத் தொடங்கும் பொழுது சபையார் முன்னிலையில் பேசுவதற்குத் தமக்கு ஏற்படும் பயத்தினால் தமது

முழங்கால்கள் தட்டாமல் இருப்பதாக - அவைகள் தவறி விடுவதாகக் கூறினார்! அவருடைய முழங்கால்கள் கட்டுப்பாடின்றி நடுங்குவதால் அவை ஒன்றுடன் ஒன்று தொடாமலேயே வேகமாக நடுங்குவதாகக் கூறினார்!

ஒரு பிரசங்கம் அல்லது பொதுவான உரையொன்றை நிகழ்த்துவதற்கு முன்பு பயம் உண்டாவதற்கான அடிப்படைக் காரணமாயிருப்பது, அந்தப் பேச்சாளர் தாம் பெறப் போகும் அனுபவம் குறித்து நிச்சயமற்றவராக இருப்பதே ஆகும். முழுமையான தயாரிப்பு மற்றும் கர்த்தர்மேல் நம்பிக்கை ஆகியவற்றினால் பக்குவப்பட்ட பேச்சாளரிடம் இந்தப் பாதுகாப்பற்ற உணர்வானது ஆவிக்குரிய தைரியத்தைக் கொண்டு இடம் மாற்றப் படுகின்றது.

மேடைப் பேச்சாளரைப் போலவே நாமும் கூட, வாழ்வது எப்படி என்று குழப்பமடையும் பொழுது, வாழ்வைப் பற்றி கடினமாகவும் நிச்சயமற்றதாகவும் உணர்வு பெறுகின்றோம். சலிப்பூட்டும் ஏக்கம் என்பது நாம் மற்றவர்களிடமிருந்து மறைத்து வைத்துள்ள இரகசியமாய் இருக்கலாம்; ஆனால் அது மற்றவர்கள் அறிந்ததாக இருந்தாலும் அல்லது நாம் மட்டும் அறிந்ததாக இருந்தாலும், நாம் கொண்டிருக்கும்படி தேவன் விரும்புகின்ற உள்ளான அமைதியைத் திருடி விடுவதினால் இது நமது வாழ்வை ஊனமாக்கி விடுகின்றது.

மேடைப் பேச்சின் பயத்தைக் கையாளுவதற்கான அதே தீர்வுதான் இந்த "அமைதியான சலிப்பு" பற்றிய பிரச்சனைக்கும் தீர்வாக உள்ளது என்று வேதாகமம் கூறுவது திகைப்புக்குரியதாக உள்ளது. "மிகவும் ஆழமான" பாவத்தைப் பற்றிய பயம், மரணம் மற்றும் தேவன் பற்றிய புரிந்து கொள்ளுதல் என்பது சத்தியத்தின் மீது அஸ்திபாரம் இடப்பட்ட வாழ்வை வாழ்வதால் மட்டுமே வரக் கூடிய அமைவு பெற்ற நிச்சயத் தன்மையைக் கொண்டு நமது உறுதியற்ற தன்மைகளை மாற்றாத வரைக்கும் மறைந்து போகாது.

தேவன் நம்மை எங்கிருக்கும்படி விரும்புகின்றாரோ, அங்கு நாம் இருக்கிறோம் என்றும், தேவன் நாம் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றாரோ, அதை நாம் செய்வதும், தேவன் தவிர இவ்வுலகில் வேறு எவராலும் அல்லது எதனாலும் உண்டாக்கப்பட முடியாத அமைதியையும் தைரியத்தையும் நமது உள்ளான மனிதனுக்குள் கொண்டு வருகின்றது.

தனிப்பட்ட சமாதானம் பற்றிய இந்தச் சிந்தனையானது கொலோசெயர் 2:10ஆ-வுடன் பிணைந்துள்ளது, அங்கு பவுல் "அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தேவன் தமது காலங் கடந்த செல்வங்கள் முழுவதையும் கிறிஸ்துவுக்குள் வைத்திருக்கின்றார். பவுல், "... பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவை களுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று" (எபே. 1:9ஆ) எனக் கூறியதில் வியப்பெதுவும் இல்லை. கிறிஸ்து நமக்குப் போதுமானவராக இருக்கின்றார், ஏனெனில் தெய்வீகமான அனைத்து ஆசீர்வாதங்களும், கிருபையின் சிலாக்கியங்களும் அவரது ஆவிக்குரிய சரீரத்தினுள் அமைந்துள்ளன.

"சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிரு(ப்பது)" (கொலோ. 1:19) தேவனுக்குப் பிரியமானதாக இருந்த காரணத்தினால் இது உண்மையாக இருக்கின்றது. இவ்விதமாகப் பவுல், "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ. 2:9) என்றும் மற்றும் அவர் "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே. 1:23) என்றும் கூற முடிந்தது.

கிறிஸ்துவுக்குள் இருந்து, தேவ வசனத்தின் வெளிச்சத்தில் நடக்கின்றவர் இளைப்பாறுதலுடனும், பயத்திலிருந்து விடுதலையான நிலையுடனும் இருக்க முடியும் என்பதே இவை யாவற்றின் நற்செய்தியாக உள்ளது; ஏனெனில் அவர் தேவனுடைய இரட்சிப்பு மற்றும் ஜீவன் ஆகியவற்றின் இடத்தில் இருக்கின்றார். வல்லமை நிறைந்த இந்த சத்தியமானது, நமது சிந்தனையை உருமாற்றி, இன்றைய நாளில் தேவனுக்கு முன்பான நமது கண்ணோட்டத்தில் செயல்விளைவை ஏற்படுத்தி, அவருடனான நமது எதிர்கால நடக்கையைக் காண வழிமுறையை அமைப்பதாக இருக்க வேண்டும். இது நமது உள்ளாழமான சிந்தனைகளுக்கும் மற்றும் வளமூட்டப்பட்ட திட்டங்களுக்கும் வண்ணந் தீட்ட வேண்டும்.

சபைக்குள் நாம் தேவனுடைய பரிபூரணத் தன்மையைப் பெற்றுள்ளோம் என்ற சுவிசேஷ உண்மைத் தன்மையைப் பற்றிக் கவனமாய்ச் சிந்தித்துப் பாருங்கள். "கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாயிருத்தல் என்றால் எதனை அர்த்தப்படுத்துகின்றது?" என்ற கேள்வியுடன் என்னோடே சேர்ந்து வேத வசனத்தை ஊடுருவித் துழாவுங்கள்.

## மன்னிப்பில் பரிபூரணம்

கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாயிருத்தல் என்பது, நாம் தேவனிடத்தில் இருந்து வந்த நமது மன்னிப்பில் பூரணப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்று அர்த்தப்படுகின்றது. புதிய ஏற்பாடானது - கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்ற - கிருபையின் ஒரே ஒரு வட்டாரத்தையே அறிந்துள்ளது! மீட்பு என்பது தேவனுடைய குமாரன் மூலமாக மட்டுமே அளிக்கப்படும்படியாகவே தேவன் தமது இரட்சிப்பின் திட்டத்தை வடிவமைத்தார் (யோவா. 14:6). ஆகையால், நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால், நீங்கள் மீட்பின் வட்டாரத்திற்குள் இருக்கின்றீர்கள் (ரோமர் 8:1); நீங்கள் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருந்தால், நீங்கள் ஆக்கினைத் தீர்ப்பின் வட்டத்திற்குள் (எபே. 2:12), பிசாசின் இராஜ்யத்திற்குள் (கொலோ. 1:13) இருக்கின்றீர்கள்.

ஆவிக்குரிய இரு இடங்களில் ஏதாவதொன்றில் மட்டுமே ஒரு நபர் இருக்க முடியும். அவர் கிறிஸ்துவுக்குள் அல்லது கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கின்றார், இரட்சிப்பின் இடத்திற்குள் அல்லது தேவனிடமிருந்து பிரிந்துள்ள இடத்தில் இருக்கின்றார். நாம் இவ்விரண்டிலுமே இல்லாதவர்களாகவோ அல்லது இவ்விரண்டிலுமே இருப்பவர்களாகவோ இவ்வுலகில் இருக்க முடியாது.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற நபர் கிறிஸ்துவின் இரட்சிப்பைப்

*பெறுவதற்கு ஒளியில் நடக்க வேண்டும் (1 யோவா. 1:7); இல்லையென்றால் அவர், இரட்சிப்பைப் பெறக் கூடிய இடத்தில் (கிறிஸ்துவுக்குள்) இருந்தும், சீமோனைப் போல் அதைப் பெற்றிருந்தும் அதை இழந்து போனவராய்க் காணப்படுவார் (அப். 8:20, 21). விசுவாசத்தினால் நடப்பது என்பது இரண்டு இன்றிமையாத பண்புகளைக் கொண்டுள்ளது: முதலாவது, இது இயேசு நம்மை இரட்சிக்க வல்லவர் என்று நம்புவதை அர்த்தப்படுத்துகின்றது (எபே. 2:8, 9), மற்றும் இரண்டாவது, இது கிறிஸ்துவின் சித்தத்திற்கு நேர்மையாகக் கீழ்ப்படிதலை உள்ளடக்குகின்றது (எபி. 5:8, 9).*

*மீட்கப்பட்ட நபர், இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப் பட்டு, அவருடைய அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தப் படுகின்றார். அவருக்குள் நமக்குப் பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டா யிருக்கிறது (கொலோ. 1:13, 14). புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்களானவர் களைப் பற்றிப் பவுல், "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபே. 2:13). பேதுருவின் கூற்றுப்படி, கிறிஸ்துவுக்குள் இருந்து கிறிஸ்துவின் கிருபையில் வளருகின்ற யாவருக்கும் பரலோகத்தின் நித்திய இராஜ்யத் திற்கு உட்படும் பிரவேசம் பரிபூரணமாய் கொடுக்கப்படும்:*

> *ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளு தலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் (2 பேது. 1:10, 11).*

*இந்த சத்தியத்தை இயேசு தமது உவமைகளில் ஒன்றுடன் (மத். 20:1-16) மறக்க முடியாத விதத்தில் விவரித்தார். திராட்சத் தோட்டக்காரர் ஒருவர் அதிகாலையில் வேலைக்குச் சில பேரை அமர்த்தினார், பிறகு அவர் 9.00 மணி, 12.00 மணி, 3.00 மணி மற்றும் 5.00 மணி ஆகிய நேரங்களில் கூடுதலான கூலியாட்களை அமர்த்தினார். அந்த வேளை நாளின் முடிவில், அவர் எல்லா வேலையாட்களுக்கும் சமமான கூலியையே கொடுத்தார்! அது நியாயமற்றதாகத் தொனிக்கின்றது இல்லையா? சாதாரணமாக எந்த ஒரு பண்ணைக்காரரும் தனது வேலையாட்கள் ஒரே அளவு வேலை செய்யா விட்டால் அவர்களுக்குச் சமமான கூலி கொடுக்க மாட்டார். இன்றைய நாட்களில் பண்ணையில் நாம் செய்கின்றதைப் பற்றியோ அல்லது முதல் நூற்றாண்டு உலகில், பண்ணையில் செய்யப்பட்டது பற்றியோ இயேசுவின் உவமையானது விவரிப்பதில்லை, ஆனால் அது, கிருபையின் இராஜ்யத்தில் தேவன் என்ன செய்கின்றார் என்பதையே விவரிக்கின்றது.*

*''சிலுவையின், அடிவாரத்தில் பூமி சமதரையாக உள்ளது.'' கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற எவரொருவரும் மற்ற எவரொருவரைக் காட்டிலும் அதிகமாக இரட்சிக்கப்பட்டு விடுவதில்லை. நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால், மற்றும் இயேசு உங்களை இரட்சிக்க முடியும் என்று நம்பி, அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதை நீங்கள்*

உண்மையாகவே நாடினால், கிறிஸ்துவுக்குள் உள்ள மற்ற எவரையும் போலவே நீங்களும் இரட்சிக்கப்பட்டு இருக்கின்றீர்கள்.

தகுதியற்றவர்களுக்குத் தயவுடன் தரப்பட்டுள்ள சுவிசேஷம் என்ற ஒரே வழியின் மூலமாகத்தான் ஒவ்வொருவரும் தேவனிடத்திற்கு வர வேண்டும். கணக்கொப்புவிக்க வேண்டிய மக்கள் யாவரும் பாவிகளாய் இருக்கின்றார்கள், மற்றும் இவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். மற்றவர்கள் அதிகமாய் இரட்சிப்பு தேவையுள்ள நிலையில் இருக்கையில் தமக்கு ஒரு சிறிதளவு மட்டுமே இரட்சிப்பு தேவை என்று எவரொருவரும் பெருமை பாராட்ட முடியாது; அல்லது, மற்றவர்கள் முழுமையாக இழந்து போகப்பட்டிருக்க, தாம் ஒரு சிறிது மட்டுமே இழந்து போகப்பட்டிருப்பதாகவும் ஒருவர் கூற முடியாது. இது எல்லாருக்கும் ஒன்று போலவே உள்ளது - கிறிஸ்துவுக்குப் புறம்பே உள்ள யாவரும் முழுமையாக இழந்து போகப்படுகின்றனர், மற்றும் கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற யாவரும் முழுமையாக இரட்சிக்கப்படுகின்றனர். எவரொருவரும் ஏறக்குறைய கிறிஸ்துவுக்குள்ளாகவோ அல்லது ஏறக்குறைய கிறிஸ்துவுக்குப் புறம்பாகவோ இருக்க முடியாது.

---

*நாம் கிறிஸ்துவுக்குள்ளாக இருப்பதைக் காட்டிலும் மேலான நிலையில் நாம் இருக்க முடியாது; நாம் கிறிஸ்துவில் பெற்றுக் கொள்வதைக் காட்டிலும் அதிகமான அளிப்புக்களை பிதாவிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாது; ஆவிக்குரிய வளர்ச்சிக்காக கிறிஸ்துவில் நமக்கு இருக்கும் சந்தர்ப்பத்தைக் காட்டிலும் அதிகமான சந்தர்ப்பம் நமக்கு இருக்க முடியாது.*

---

ஒப்புவமை என்ற உருப் பெருக்கியின் மூலமாக இரட்சிப்பைப் பற்றிய இந்த சத்தியத்தை நோக்குங்கள். எட்டுப் பேர் மாத்திரமே நோவாவின் பேழைக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். இருப்பினும், பேழைக்குள் சென்ற, அந்த எட்டுப் பேரும் பாதுகாப்பான நிலையினுள் இருந்தார்கள். அவர்களில் எவரொருவரும் மற்ற ஏழு பேரைக் காட்டிலும் எவ்வகையிலும் அதிகம் பாதுகாப்பாக இருந்ததில்லை. நோவா அங்கிருந்த மற்றவர்களை விட ஆவிக்குரிய வகையில் அதிகம் பக்குவப்பட்டவராக இருந்திருக்கலாம், ஆனால் பேழைக்குள் இருந்த அனைவரும் துன்பத்திலிருந்து விடுதலையாய் இருந்தார்கள். பேழைக்குப் புறம்பே இந்தப் பூமியில் இருந்த மக்கள் திறள் கூட்டம் முழுவதும் தண்ணீர்க் கல்லறையில் அழிவை அடைந்தார்கள்.

வாழ்வின் முற்பகுதியில் வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டிருந்த ஒரு மனிதருடன் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு நான் (வேதாகமத்தைப்) படித்துக் கொண்டிருந்தேன். அவர் தனது குற்றத்தினால் தண்டனை பெற்று தனது காலத்தைத் தண்டனைச் சாலையில் செலவிட்டிருந்தார். அவருடைய வாழ்க்கையின் முடிவு வேளையில், புற்று நோயினால் அழிக்கப்பட்டு, வாழ்வதற்கு ஒரு சில நாட்கள் மட்டுமே இருந்த வேளையில், நான்

அவரிடம் சென்று கிறிஸ்தவராவது எப்படி என்று கூற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். மருத்துவமனையில் அவரது படுக்கையின் அருகே அமர்ந்த நான் இரட்சிப்பின் வழியை விளக்கப்படுத்தும் வேத வசனப் பகுதிகளை அவருக்காக வாசிக்கத் தொடங்கினேன். அவருடன் சுமார் இரண்டு மணி நேரம் படித்த பிறகு, அவர் தாம் ஒரு கிறிஸ்தவராகும்படி ஞானஸ்நானம் பெறுவதற்குத் தமக்குள்ள விருப்பத்தைக் கண்ணீருடன் தெரியப்படுத்தினார். நான் அவரிடத்தில், ''நீங்கள் சுகமடைந்தால், அவருக்கு ஊழியம் செய்யத் திட்டமிட்டிருக்கின்றீர்களா?'' என்று கேட்டேன். அவர் தம் வாழ்வின் எஞ்சிய பகுதியில், எப்படியிருப்பினும், எந்த சூழ்நிலையிலும் கிறிஸ்துவுக்கென்றே தாம் வாழ விரும்புவதாகக் கூறினார். அந்த நாளின் பிற்பகுதியில், அருகில் உள்ள ஞானஸ்நானத் தொட்டிக்கு இழுவை வண்டியில் அவரை வைத்து எடுத்துச் சென்ற கிறிஸ்தவர்கள் சிலரால் அவர் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார். அவருடைய ஞானஸ்நானத்திற்கு ஒரு வாரத்திற்குப் பிறகு, அவர் வாழ்வின் மறுபக்கத்திற்குக் கடந்து சென்றார்.

அவர் தமது வாழ்வின் 99 சதவிகிதத்தை இருளின் இராஜ்யத்தினுள் வாழ்ந்திருந்தாலும், ஞானஸ்நானத்தில் - அவரது பதில்செயல் உண்மையாயிருந்தது என்றும், அவரது விசுவாசம் மேன்மையானதாயிருந்தது என்றும் யூகிக்கப்பட்ட நிலையில் - அவர் கிருபையின் இராஜ்யத்திற்குள் பிரவேசித்தார். அவரது வாழ்வின் வாய்ப்புக்களின் நள்ளிரவு வேளையில் அவர் இவ்வாறு பிரவேசித்திருப்பினும், வாழ்வின் முற்பகுதியில் பிரவேசித்தவர்கள் பெறுகின்ற அதே நித்திய ஜீவன் என்ற கொடையையே இவரும் பெறுவார். அவரது வாழ்வின் கடைசி ஒரு வாரத்தில் அவர் மீட்பின் நிலையில், கிறிஸ்துவுக்குள் முழுமையாய் நின்றிருந்தார். அவர் பந்து விளையாட்டின் கடைசி ஆட்டத்தில் ஒரு பவனி வந்து வெற்றி பெற்றது போல வாழ்வின் விளையாட்டில் வெற்றி பெற்றார்.

கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் பிரவேசிப்பது எப்படி என்பதற்கு கலாத்தியர் 3:27 ஒரு வெளிப்படையான வசனப் பகுதியாக உள்ளது: ''ஏனெனில், உங்களில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே.'' பின்வருவதை மட்டும் நினைத்துப் பாருங்கள்: தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் விசுவாசத்துடன் வந்து, பாவம் யாவற்றிற்கும் மனம் வருந்தி, இயேசுவின் மீதுள்ள தம் விசுவாசத்தை அறிக்கையிட்டு, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகின்ற எவரொருவரும் தேவனிடம் இருந்து வரும் மன்னிப்பில் உடனடியாக முழுமையடைகின்றார். அவர் மீட்கப்பட்டவர்களின் வட்டாரத்தினுள் பிரவேசிக்கின்றார், அங்குள்ள குடிமக்கள் யாவரும் பாவமன்னிப்பையும் நித்திய ஜீவனையும் பெற்றுள்ளார்கள்.

## அளிப்புகளில் பரிபூரணம்

கிறிஸ்துவுக்குள் பரிபூரணபட்டிருத்தல் என்பது ஒரு கருத்தில், நாம்

ஆவிக்குரிய அளித்தல்களில் பரிபூரணப்பட்டிருக்கிறோம் என்றாகின்றது. நித்திய மகிமையின் வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்திற்கான நமது பயணத்திற்குத் தேவையான ஆவிக்குரிய அளிப்பு மற்றும் ஆதார மூலம் எதுவும் (யாவும்) நமக்குக் கிடைக்கக் கூடியதாக உள்ளது.

கொலோசெயில் இருந்த சபையானது, இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டத்தில் கிறிஸ்துவின் இடத்தைக் குறிக்கின்றதான ஒரு வகையான தேவ தூஷணத்தினால் (தொடக்க கால கடவுள் நம்பிக்கையின்மை என்றிருக்கலாம்) பாதிக்கப்பட்டிருந்தது. (அந்தக்) கள்ள போதகத்தைத் தோல்வியுறச் செய்து, அழிப்பதற்காகப் பவுல் கிறிஸ்துவின் உயர் தன்மையை முற்றிலுமாகக் கொலோசெயருக்கு விளக்கியுரைத்தார். கிறிஸ்துவுக்குள் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக உள்ளது என்று அவர் கூறினார் (கொலோ. 2:9). அதாவது, பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசுவும் மற்றும் பரிசுத்த ஆவியானவரும் நமக்குக் கொடுக்க நாடுகின்ற யாவையும் கிறிஸ்துவுக்குள் முழுமையாக, சுயாதீனமாக மற்றும் இறுதியாக அளிக்கப்பட்டுள்ளன. தேவன் நமக்குக் கொடுக்க விழைகின்ற ஆவிக்குரிய செல்வங்கள் யாவற்றின் ஆதார மூலமாகவும், உருத் தோற்றமாகவும், முழுமையான உணர்ந்தறிதலாகவும் மற்றும் முழுமையான தொகுப்பாகவும் உள்ளவர் அவரே (கிறிஸ்துவே) ஆவார். எனவே இதைத் தொடர்ந்து, நாம் அவருக்குள் நிறைவடைகின்றோம் (கொலோ. 2:10), அதாவது வேறொன்றும் நமக்குத் தேவைப்படுவதில்லை என்ற கருத்து கிடைக்கின்றது.

கிறிஸ்துவுக்குள் இருக்கும் இந்தப் பரிபூரணத் தன்மைக்காகப் பவுல், எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் தொடக்கத்தில் தமது உபதேசத்தில் தேவனைப் பின்வருமாறு ஸ்தோத்தரித்தார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபே. 1:3). பேதுரு தமது இரண்டாம் நிருபத்தின் தொடக்கத்தில் இதே போன்றதொரு அறிவிப்பை ஏற்படுத்தினார்: "தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது ..." (2 பேது. 1:2, 3). இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் *எங்குள்ளன* என்று பவுல் நமக்குக் கூறுகையில், இவைகளை நாம் *எவ்வாறு பெறுகிறோம்* என்று பேதுரு நமக்குக் கூறினார். இந்த ஆசீர்வாதங்கள் *கிறிஸ்துவுக்குள் உள்ளன* என்று பவுல் நமக்குக் கூறினார்; மற்றும் இவைகள் *இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினால்* உண்டாகின்றன என்று பேதுரு நமக்குக் கூறினார். இருப்பினும், இவ்விரண்டு எழுத்தாளர்களுமே நமக்கு தேவனுடைய வரங்களின் போதுமான தன்மையின் முழுமையை வலியுறுத்தினார்கள்.

"தண்ணீரின் கீழ் செல்லும் கப்பல்களான" நீர் மூழ்கிக் கப்பல்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவைகள் மனிதர்களின் குழுக்களைப் பத்திரமாகவும் வசதி மிக்க வகையிலும் கடல்களின் ஆழங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடியவைகளாய் இருக்கின்றன. மேற்பரப்பின் கீழாக "வாழும்

சமூகங்கள்'' என்ற வகையில் அவைகள், உணவறைகள், படுக்கைகள், பொழுதுபோக்கு வசதிகள், எல்லா வகையான செய்தித் தொடர்பு அமைப்புகள் மற்றும் அவ்வப்போது எழுகின்ற எந்த வகையான தேவைகளையும் சந்திக்கக் கூடிய நவீன தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை முழுமையாகக் கொண்டுள்ளன.

கடலின் தரைப்பகுதியில் உள்ள பரந்த சமவெளிகள் மற்றும் உயர்ந்த மலைகள் ஆகியவற்றில் அபாயங்கள் மறைந்துள்ளன, இருப்பினும் இந்த அழிவுகளினூடே தீங்கற்ற வகையில் நீர் மூழ்கிக் கப்பலானது செல்லு கின்றது - இது தனது பயணிகளுக்குப் பாதுகாப்பை அளிப்பது மட்டுமின்றி, அவர்களுக்கு சாதாரணமான வாழ்வை அளித்து, பயணத்தையும் மேற் கொள்ள வைக்கின்றது! திகைப்புக்குரிய முரண்பாடு ஒன்றுள்ளது: பாதுகாப்பு, வாழ்வு மற்றும் மகிழ்ச்சி ஆகியவை, மரணம், பயங்கரம் மற்றும் இருள் ஆகியவற்றின் மத்தியில் கிடைக்கின்றன!

மிகவும் உயர்வான அளவையில், கிறிஸ்துவுக்குள்ளான நமது வாழ்வானது இதே வகையான சித்தரிப்பினால் விவரிக்கப்படக் கூடும். அவருக்குள் நாம் நித்திய மரணத்திலிருந்து விடுதலையாகுதலை மட்டு மின்றி, பாவத்தின் நித்திய விளைவுகளிலிருந்து பாதுகாக்கப்படுதலையும் பெற்றுள்ளோம் (ரோமர் 8:1), நாம் வாழ்வின் புதிய தரத்திற்கான அளிப்புகளின் உடைமைத்துவத்தில் இருக்கின்றோம். பரலோகத்தின் ஆவிக்குரிய ஏராளமான ஆசீர்வாதங்களினால் சூழப்பட்டுள்ள நாம் (யோவா. 10:10) வரவிருக்கின்ற மகிமையின் முன் கதிர்களைச் சுவைக்கின்றோம்.

நீர்மூழ்கிக் கப்பலின் வெளியே ஒருவர் இருக்கையில், அவர் கடலின் அழிவுகளினால் விரைவில் அழிக்கப்படுவது போலவே, கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்கள் நம்பிக்கையற்றவர்களாய் இருப்பார்கள் (எபே. 2:12). இரட்சிப்பின் நீர்மூழ்கிக் கப்பல் என்பது கிறிஸ்துவின் சரீரமாக உள்ளது. அவருக்குள் நாம் பாதுகாப்பாக உள்ளோம்; அவருக்குப் புறம்பே நாம் பாவத்தின் பெருங்கடலினால் சிதைக்கப்படுகின்றோம். கிறிஸ்து நமது பாதுகாப்பாகவும் அளிப்பாகவும், நமது பாதுகாவலாகவும் நிலைநிறுத்து தலாகவும் உள்ளார்.

நீங்கள் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருந்தால், நிச்சயமாகவே நீங்கள், "ஒருவர் கிறிஸ்துவுக்குள் எவ்வாறு பிரவேசிக்கின்றார்?" என்று கேட்பீர்கள். நாம் அவரது சரீரத்திற்குள்ளாக மாற்றப்படுவது எவ்வாறு என்பதற்குப் பவுல் அளிக்கின்ற விளக்கத்தை ஜாக்கிரதையாய்க் கவனியுங்கள்: "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோமர் 6:3). நமது விசுவாசமானது அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானமாக வளர்ச்சியின் உச்சத்தை அடையும் பொழுது நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக்கப்படுகின்றோம், மற்றும் நாம் அவருக்குள் வாசம் பண்ணி, கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் அன்றாடம் வாழ்கின்றோம்.

## சாத்தியமாகுதலில் பரிபூரணம்

கிறிஸ்துவுக்குள் நிறைவடைதல் என்பது நாம் சாத்தியத்தில் பரிபூரணம் அடைகிறோம், தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வழங்கும் அளிப்புகள் எல்லாவற்றையும் சேரும் வழியில் நிறைவடைகின்றோம் என்றும் அர்த்தமாகின்றது. ஆவிக்குரியவற்றிற்கான சம வாய்ப்புக்கும் கிறிஸ்துவைப் போன்றே வளருவதற்கும் கிறிஸ்துவுக்குள் இடம் உள்ளது.

கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கின்ற ஒருவர் தமது பாவத்தினால் தேவனுடன் ஐக்கியம் கொள்ளுவதில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளார்; கிறிஸ்துவுக்குள் இவ்வித பிரிவினை எதுவும் நிலைநிற்பதில்லை, ஏனெனில் அவருடைய இரத்தத்தினால் நமது கடந்த காலப் பாவங்கள் எடுத்துப் போடப்பட்டன மற்றும் நம்முடைய நிகழ் காலப் பாவம் எடுத்துப்போடப் படுகின்றன. இவ்விதமாக, யூதர் அல்லது புறஜாதியாரான எவரொருவரும் கிறிஸ்துவுக்குள் "ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்" (எபே. 2:18). பிரவேசித்தலுக்கான இந்தச் சுயாதீனமானது ஒரு திறந்த கதவாக மட்டும் இருப்பதில்லை; இது வரவேற்புப் பலகையொன்று தொங்குகின்ற திறந்த கதவாக உள்ளது. நாம், "அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" (எபே. 3:12) என்று வாசிக்கின்றோம்.

''வந்து எங்களைக் காணுங்கள்!'' என்ற பிரியாவிடைச் சொல் விளக்கத்தை நீங்கள் அநேகமாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது "போய் வருகிறோம்'' என்று கூறுவதன் வட்டார வழக்காக/கொச்சையான வழக்காக உள்ளது. இது, இவ்வார்த்தைகளைப் பேசுகின்ற ஒருவர் தனது வீட்டிற்கு வரும்படி நோக்கத்துடன் விடுக்கின்ற குறிப்பான அழைப்பாக இருப்பதில்லை. இது தீவிரமானதாக எடுத்துக் கொள்ளப்படத் தேவையற்ற அரைகுறையான, அரைமனதான வேண்டுகோளாக உள்ளது என்று நாம் கூறலாம். நம்மை வரவேற்பதற்குத் தேவனுடைய வசனங்கள் சாதாரண மானவைகளாகவோ அல்லது ஆழமான மேன்மையான அர்த்தமற்றவை களாகவோ இருப்பதில்லை. அவர் நம்மைத் தம்முடைய ஐக்கியத்தினுள் இருக்குமாறு உற்சாகப்படுத்துவது மட்டுமின்றி, விவரிப்புக்கு அப்பாற் பட்ட ஆர்வத்துடன் அவர் நம்முடன் ஐக்கியம் கொள்ள நாடுகின்றார். மரணத்தைக் காட்டிலும் பலம் மிகுந்த ஒரு அன்புடன் அவருடைய இருதயமானது நம்மை வந்தடைகிறது.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் பரலோகத்தின் ஆவிக்குரிய பண்டக சாலைக்குச் சேரும் சுதந்திரமான நமது வழியின் காரணத்தினால், யோவானுடன் சேர்ந்து ஒவ்வொரு கிறிஸ்தவரும் பின்வருமாறு கூற முடியும்: ''நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (1 யோவா. 3:1அ).

கிறிஸ்துவுக்குள் மீட்கப்பட்டுள்ள நபர், தேவனுடனும், கிறிஸ்து வுடனும் மற்றும் பரிசுத்த ஆவியுடனும் தாம் தேர்ந்து கொள்கின்ற

அளவுக்கு நெருக்கமாக நடக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கின்றார். ஐக்கியத்தில் அவரது வளர்ச்சியானது வாய்ப்புக் குறைவினாலோ அல்லது முழு அனுமதியின் குறைவினாலோ ஒருக்காலும் தடை செய்யப்படாது. தேவனிடம் நெருங்கிச் சேருவதில் ஏற்படும் எந்தத் தோல்வியும் நம் தோல்வியாய் இருக்கிறதேயன்றி தேவனுடைய தோல்வியாய் இருப்ப தில்லை. கிறிஸ்துவுக்குள் இருக்கிற நாம் அனைவரும் ஒரு நாளைக்கோ அல்லது பத்தாண்டுகளுக்கோ, ஒரு நிமிடமாகவோ அல்லது ஒரு மாதமாகவோ எவ்வளவு சிறிது காலம் கிறிஸ்துவுக்குள் இருப்பினும் நமது பிதாவிடம் சுதந்திரமாக வருவதற்கான திறனின் இந்த சிலாக்கியத்தில் சமமானவர்களாகவே இருக்கின்றோம். பவுல், "யூதனென்றும் கிரேக்க னென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா. 3:28) என்று எழுதினார். நாம் சத்தியத்தில், ஐக்கியத்தில், தேவனிடத்தில் நெருங்கக் கூடிய திறனில், மற்றும் இரட்சிப்பில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளோம்; ஆகையால், நாம் கிறிஸ்து வுக்குள் உண்மையிலேயே ஒன்றாயிருக்கின்றோம்.

சிலாக்கியமானது உடைமைத்துவத்தை அவசியமாய் அர்த்தப்படுத்த வேண்டியதில்லை என்பதையும், பிரவேசிக்கும் உரிமையானது நாம் பிரவேசித்துள்ளோம் என்று அர்த்தப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். ஒரு மனிதர், தமது நண்பர்களைக் காண்பதற்காக அட்லாண்ட்டிக் மாகடலைக் கடந்து செல்லத் திட்டமிட்டது பற்றி நான் வாசித்துள்ளேன். அவர் கடற்பயணச் சீட்டிற்குப் போதிய பணம் பெறுவதற்காகப் பெரிதும் போராடியிருந்தார், அப்பயணத்திற்குப் போதுமான பணம் பெறும் வரையிலும் பல ஆண்டுகளாகத் தனது உபரிப் பணத்தைச் சேமித்து வைத்தார். அவர் தனது பயணச் சீட்டைப் பெற்று, அந்த நீண்ட பயணத்தில் தம்மை நிலை நிறுத்தினார். பயணச் சீட்டின் கட்டணத்தில் உணவுக் கட்டணமும் அடங்கியுள்ளது என்று அறிந்திராத நிலையில் அவர் தமது பயணப் பைகளில் பாலாடைக் கட்டிகளையும் சில பிஸ்கட்டுகளையும் சேமித்திருந்தார். அந்தப் பயணத்தின் பொழுது, அவைகளைத் தின்று உயிர் வாழ அவர் திட்டமிட்டார். "எவரொருவரும் எதையாவது தின்று ஓரிருவாரங்கள் உயிர் வாழ முடியும்" என்று அவர் நினைத்தார். அட்லாண்டிக் கடலைக் கடக்கும் அந்தப் பயணத்தின் பாதி வழியில் யாரோ ஒருவர் தற்செயலாக அவரிடத்தில், பயணக் கட்டணத்தில், அங்குள்ள உணவறையில் கிடைக் கின்ற சூடான உணவும் உள்ளடங்குகிறது என்று தகவல் தெரிவித்தார்!

புரிந்து கொள்ளுதலில் உள்ள குறைவினால் இந்த மனிதர் தனது சிலாக்கியங்களுக்குக் கீழான நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தார். மற்ற எந்தப் பயணியையும் போலவே இவரும் உணவறைக்குச் செல்லக்கூடிய அதே உரிமையைப் பெற்றிருந்தார், ஆனால் இவர் தாம் விலை கொடுத்து வாங்கியிருந்த அந்த அனுகூலத்தைப் பயன்படுத்தாமல் இருந்தார். இவர் தமது உடமைகளை உடமையாக்கிக் கொள்ளாதிருந்தார்; இவர் தமது சாத்தியத்தைக் கைப்பற்றிக் கொள்ளாதிருந்தார்.

இஸ்ரவேலர்கள் கானான் நாட்டை நெருங்குவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே அவர்கள் "நான் அந்த நாட்டை உங்களுக்குக் கொடுப்பேன்" (யோசு. 1:2) என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை பெற்றிருந்தார்கள். அவர்கள் யோர்தான் நதியைக் கடந்து தேவன் தங்களுக்கு அளித்திருந்த உடமையைப் பெற்றுக் கொண்ட பொழுது அந்த மகிழ்ச்சியான நாள் விரைவிலேயே வந்தது. தேவன் அவர்களிடத்தில், "நான் உங்களுக்கு (இந்த) நாட்டைக் கொடுத்துள்ளேன், ஆனால் நீங்கள் அதை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும்" (யோசு. 1:11) என்று உரைத்தார்.

தேவன் கிறிஸ்துவுக்குள் இதே அறிவுறுத்தலை நமக்கும் கொடுத்திருக் கின்றார்: "எனது ஆசீர்வாதங்களிடம் வந்து சேரும் வழிகள் எல்லா வற்றையும் நான் உங்களுக்குக் கொடுத்துள்ளேன். கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு, ஞானம் அறிவு என்பவைகளின் பொக்கிஷங்கள் யாவையும், என்னுடன் மிக நெருக்கமான ஐக்கியமும், மற்றும் என் பெலத்தால் வெற்றிகளும் கிடைக்கின்றன; ஆனால் அவைகளைப் பெறுவதற்கு நீங்கள் வந்து அவற்றை அடைய வேண்டும். நான் உங்களுக்கு நாட்டைக் கொடுத் துள்ளேன், ஆனால் நீங்கள் அதை உடமையாக்கிக் கொள்ள வேண்டும்."

இயேசுவின் ஆவிக்குரிய சரீரத்தில் இருக்கின்றவர்கள் சாத்தியத்தில் பரிபூரணமானவர்களாய் இருக்கின்றனர். நாம், பவுல், பேதுரு மற்றும் யோவான் ஆகியோரைப் போன்றே தேவனுடன் நெருங்கி நடக்க வாய்ப்பை பெற்றிருக்கின்றோம். பாவம், சோம்பல், சுயநலம் மற்றும் கர்வம் போன்ற சுயவலிவான பாவங்களே நாம் தேவனுடன் ஐக்கியம் கொள்ளத் தடைகளாக உள்ளன. மனிதனுக்குத் தேவனுடைய முழுமையான வெளிப்பாடான வேதாகமம் நமது கரங்களில் உள்ளது. வேத வசனங் களுக்குத் தொடக்க நிலையில் கீழ்ப்படிந்து கிறிஸ்துவிடம் வந்துள்ள நிலையில் நாம், நமது வாழ்வின் எஞ்சிய பகுதியில் அவரது சித்தம் பற்றிய அறிவில் வளர முடியும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணு கின்றார், நாம் ஜெபிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம் (கலா. 4:6). தேவனிடமுள்ள நமது வரவேற்பில் நாம் ஒருபோதும் களைப்படை வதில்லை; நாம் அவரிடத்தில் ஜெபிக்கின்ற ஜெபங்களைக் கேட்கக் கூடாத அளவுக்கு அவர் ஒருக்காலும் தீவிரமான பணியில் ஈடுபட்டிருப்பதில்லை. அவர் நம்முடன் அன்றாடம் நடக்க விரும்புகின்றார், மற்றும் அவர் தம்முடனான ஐக்கியத்தின் மதிப்பையும் மகிழ்ச்சியையும் நாம் புரிந்துணர வேண்டுமென்று நமக்காகப் பொறுமையுடன் காத்திருக்கின்றார். அவருக்குப் பிரியமான மற்றும் ஏற்புடைய ஆராதனையை நாம் அன்றாடம் ஏறெடுக்க முடியும், அவரைப் பிரியப்படுத்துகின்ற ஆராதனையும் துதியும் அவருக்கு முன்பாக சுகந்த வாசனையாக வருகின்றது. கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனுடைய ஐசுவரியங்கள் யாவற்றையும் அடைவதற்கு நமக்கு சாத்தியக்கூறுகள் அளிக்கப்பட்டுள்ளன.

## முடிவுரை

கிறிஸ்துவுக்குள் நாம் முழுமையானவர்களாக - மன்னிப்பில், அளிப்பு

*களில் மற்றும் சாத்தியத்தில் பரிபூரணமுள்ளவர்களாக - இருக்கின்றோம் என்பது நமக்கு எவ்வளவாய் விளக்கியுரைக்கப்பட முடியாத மகிழ்ச்சியைக் கொண்டு வர வேண்டும்! கிறிஸ்துவுக்குள் இருப்பதைக் காட்டிலும் மேலான நிலையில் நாம் இருக்க முடியாது; கிறிஸ்துவுக்குள் நாம் பெறுகின்றவைகளைக் காட்டிலும் அதிகமான அளப்புகளை (வேறு வழியில்) நாம் பிதாவிடமிருந்து பெற முடியாது; ஆவிக்குரிய வளர்ச்சிக் கென்று கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டுள்ள வாய்ப்புகளைக் காட்டிலும் பெரிய வாய்ப்புக்களை நாம் கொண்டிருக்க முடியாது. நாம் பெரிய மலைச் சிகரத்தினிடத்தில், அனுகூலத்தின் மாபெருமிடத்தில் (Summum bonum), உயர்ந்த, மாபெரும் நன்மையினிடத்தில் வந்துள்ளோம். நாம் சகலமும் கூட்டப்பட்டதின் இடத்தை வந்தடைந்துள்ளோம். இந்தக் காரணத்தினால் பவுல், "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும், அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும், அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ. 1:19, 20) என்றெழுதினார்.*

*நீங்கள் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஒரு தங்க மெடலை வென்று, அந்தப் பந்தயத்தில் நீங்கள் உலகிலேயே மிகச் சிறந்தவர் என்று நீங்கள் அறிய நேர்ந்தால் எப்படியிருக்கும்? நீங்கள் இந்திய நாட்டின் ஜனாதிபதியாகி, இந்தியாவிலேயே மிகவும் உயர்ந்த பதவியை வகிக்க நேர்ந்துள்ளதை அறிந்தால் எப்படியிருக்கும்? நீங்கள் உலகிலேயே மிகப்பெரிய பணக்கார மனிதராகி, உங்களை விட அதிகமாகப் பணம் படைத்தவர் வேறெவரும் இல்லை என்று அறிய நேர்ந்தால் எப்படியிருக்கும்? வாழ்வின் உச்சியில் நீங்கள் என்னவாயிருப்பீர்கள்? அது உங்கள் வாழ்வை நிறைவுள்ளதாக்குமா? ஆக்காது என்றே நான் நம்புகின்றேன்.*

*கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஒவ்வொருவரும், அவருடைய அல்லது அவளுடைய வாழ்வின் நிலைகள் எவ்வளவு தாழ்மையானதாக இருப்பினும், மற்றும் அவரோ அல்லது அவளோ எஞ்சியுள்ள உலகத்த வரால் அறியப்படாது இருந்த போதிலும், அவர் அல்லது அவள், தேவனு டைய கண்ணோக்கத்தில் உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்த இடத்திலேயே இருக்கின்றார். தங்கப் பதக்கத்தை வென்றவர், ஜனாதிபதி அல்லது பெரும் பணக்காரர் என்ற நிலைகள் கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதைக் காட்டிலும் தாழ்வானவைகளாகவே இருக்கின்றன. அவருடைய ஆவிக்குரிய சரீரத்தின் அவயவம் என்ற வகையில் நீங்கள் எல்லாவற்றையும் கொண்டிருக்கிறீர்கள். கிறிஸ்துவின் யுகத்தில் தேவன் எவரொருவருக்கும் கிடைக்கச் செய்யும்படி நாடுகின்ற எல்லாவற்றையும் சென்றடைய உங்களுக்கு வழி வகை ஏற்பட்டுள்ளது.*

*நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால், உங்களை விட எவரொருவரும் பெரும் வளங்களைப் பெற்றிருப்பதில்லை: "எல்லாம் உங்களுடையதே; பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ் காரியங்களாகிலும், வருங்காரியங் களாகிலும், எல்லாம் உங்களுடையது" (1 கொரி. 3:21ஆ, 22). நீங்கள்*

கிறிஸ்துவுக்குப் புறம்பே இருந்தால், உங்களைப் பார்க்கிலும் வேறொருவரும் ஏழ்மையினால் அதிகமாய்த் தாக்கப்பட்டிருப்பதில்லை: "... கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாய் ..." *(எபே. 2:12)* இருப்பீர்கள்.

*முழு விஷயத்தின் முடிவையும் நாம் கேட்போமாக: கிறிஸ்து இல்லாமல் நாம் மதிப்புள்ள எதையும் கொண்டிருப்பதில்லை; அவருடன் இருக்கையில் நாம் உண்மையான மதிப்புள்ள ஒவ்வொன்றையும் கொண்டிருக்கின்றோம்!*